# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.
# TIRUVANNAMALAI.
## S.C. No. 159/2019

**10.07.2025. அ.சா.13** கோவிந்தசாமி, த.பெ. கந்தசாமி .

**Accused present.**

**எதிரிகள் தரப்பில் 311 குவிமுச மனு அனுமதிக்கப்பட்டு அ.சா13 மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-**

புகாரை நான் வாங்கவில்லை . வேலாயுதங்கொட்டா, ஐயம்பாளையம் புதூர் என்பதுவெவ்வேறு பகுதிகள் என்றால்சரிதான். இரண்டு பகுதிகளுக்கும் இடையே சுமார் 1/2 கி.மீ தூரம் இருக்கும் . புகாரில் மணிகண்டனின் எத்தனை மணிக்கு ஏர்கலைப்பையை எடுத்து சென்றதாகவும், தேவேந்திரன் அன்று இரவே அதைப்பற்றி எத்தனை மணிக்கு கேட்டதாக சொல்லவில்லை என்றால் சரிதான் . கொம்பு மற்றும் மூங்கில் கொம்பு ஆகியவை வெவ்வேறு என்றால் சரிதான் . மரத்தடியும், மரக்கட்டையும் வெவ்வேறு என்றால் சரிதான் . புகாரிலும், எனது விசாரணையிலும், இடது பக்க நெற்றியிலும் , இடது பக்க கன்னம் , இடது முன்கால் மற்றும் இடது தோள்பட்டையில் அடித்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான் . 10.06.2018 அன்று காவல் நிலையத்திற்கு எத்தனை மணிக்கு சென்றேன் என்றால் காலை 11.30 மணியளவில் சென்றேன். சாட்சி பட்டியலில் 14 வது சாட்சியாக உள்ள தனகோட்டி என்பவரது வாக்குமூலத்தில் 11 மணியளவில் தனது நிலத்தில் இருந்ததாகவும் , அப்போது போலிசார் வந்ததாகவும் சொல்லியுள்ளார் என்றால் சரிதான் . தகவல் அறிந்து காவல் நிலையத்தில் இருந்து நேராக சம்பவ இடத்திற்கு தான் சென்றேன் . சாட்சி தனகோட்டி தனது வாக்குமூலத்தில் சாட்சி குமார் ஏன் தனது நிலத்திற்கு வந்தார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான் . சாட்சி குமார் அஸ்வநாதசூரனை கிராமத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான் . மாதிரி வரைபடம் சம்பவ இடத்தை பார்வையிட்டு என்னால் தயாரிக்கப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். அந்த பகுதி விவசாயம் செய்யக்கூடிய பகுதி என்றால் வீடும்விவசாயமும் உள்ளது . அந்த இடத்தில் கொம்பு , கட்டை ஆகியவை இருக்கும் என்றால் சரிதான் . மாதிரி வரைபடத்தில் தனகோட்டி என்பவரின் நிலம் இல்லை என்றால் சரிதான் . சாட்சி குமார் தனது வாக்குமூலத்தில் ஏன் தனகோட்டி நிலத்திற்கு ஏன் சென்றார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான் . மாதிரிவரைபடம், பார்வை

மகசர் தயார் செய்ய சுமார் 1.30 மணி நேரம் ஆகும் என்றால் சரிதான். சாட்சிகள் சாரதா, நிரோஷா, நிஷா, சாந்தி ஆகியோர்கள் இறந்த தேவேந்திரனின் நெருங்கிய உறவினர்கள் என்றால் சரிதான். சாட்சிகள் 13.45 மணிக்கு 10.06.2018 அன்று எங்கு வைத்து விசாரித்தேன் என்றும், குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். காவல் நிலையத்தில் வைத்து புகார் கொடுக்கம்போது விசாரித்தேன். அந்த சாட்சிகளை தனித்தனியாக விசாரித்தேன். சாட்சிகளை விசாரணை செய்ய 1 நாள் ஆனது. பிரேத விசாரணை அறிக்கையை 10.06.2018 அன்று 13.45 மணிக்கு நான்தான் தயார் செய்தேன். பிரேத விசாரணை சாட்சிகள் அனைவரும் இறந்தவரின் நெருங்கிய உறவினர்கள் என்றால் சரிதான். பிரேத விசாரணை அறிக்கையில் தேவேந்திரன் மயங்கி விழுந்துவிட்டதாகவும், அவரை உடனே அவர் அண்ணன் காரில் அழைத்துச்சென்றதாகவும் குறிப்பிட்டு உள்ளது என்றால் சரிதான். பிரேத பரிசோதனை வேண்டுகோள் கடிதத்தில் தேவேந்திரனை மரத்தடியால் அடித்ததாக குறிப்பிட்டு உள்ளது என்றால் சரிதான். பார்வை மகசர் மற்றும் கைப்பற்றுதல் மசரில் உள்ள சாட்சிகளான தனகோட்டி மற்றும் குமார் ஆகியோரை கூடவே காவல் நிலையத்திற்கு அழைத்து வந்தேன். மேற்படி சாட்சிகளின் பின்னனி குறித்து நான் விசாரிக்கவில்லை. எதிரி சங்கரை ஐயம்பாளையம் பஸ் ஸ்டான்டில் பார்த்தபோது அவர் தப்பித்து ஓட முயற்சிக்கவில்லை. ஒரு நபரின் ஒப்புதல் வாக்குமூலம் நீதித்துறை நடுவரால் மட்டுமே பதிவு செய்ய முடியும் என்றால் சரியல்ல. எதிரி எந்த ஒப்புதல் வாக்குமூலமும்கொடுக்கவில்லை என்றும் நான் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் மரக்கட்டை எதுவும் கைப்பற்றபடவில்லை என்று சொன்னால் சரியல்ல. மரக்கட்டை கைப்பற்றப்பட்ட இடம் ஒரு திறந்தவெளி என்றால் சரிதான். கைப்பற்றிய ஆயுதத்தை மருத்துவரிடம் காண்பித்து கருத்துரை எதுவும் பெறவில்லை. ஏர்கலைப்பை எதுவும் கைப்பற்றவில்லை. 10.06.2018 அன்று கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் வழக்கு சொத்துக்களை நீதிமன்றத்திற்கு அனுப்பினேன். வேலூர் வட்டார தடயவியல் ஆய்வக அலுவரின் வாக்குமூலம் நான் பதிவு செய்யவில்லை. இறுதி அறிக்கையில் சம்பவ நேரம் குறித்து சொல்லப்படவில்லை என்றால் சரிதான். விபத்து பதிவேட்டில் தன்னை 4 தெரிந்த நபர்கள் தாக்கியதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சொன்னநேரத்தில்சொன்ன இடத்தில் எந்த சாட்சிகளின் வாக்குமூலத்தையும் நான் பதிவு செய்யவில்லைஎன்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் சொன்ன

இடத்தில் உச்ச நீதிமன்ற வழிகாட்டுதலை பின்பற்றி எதிரியை கைது செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல . இந்த வழக்கில் என்னால் கைப்பபற்றப்பட்டதாக சொல்லப்படும் வழக்கு சொத்துக்கள் வெளியே கிடைக்கக்கூடியது என்றும் என்னால் ஜோடிக்கப்பபட்டது என்று சொன்னால் சரியல்ல . இந்த வழக்கில் இறந்த தேவேந்திரனின் உடைமைகளை நான் கைப்பற்றவில்லை என்று சொன்னால் சரிதான். 10.06.2018 அன்று காலை 11 மணிக்கு எதிரியை கைது செய்து விட்டு சட்டத்திற்கு புறம்பாக காவல் நிலையத்தில் வைத்தேன் என்றால் சரியல்ல . வேலூர் வட்டார தடயவியல் ஆய்வகத்தில் இருந்து பெறப்பட்ட அறிக்கை காவல் நிலைய ஆணைகளுக்கு எதிரானவை என்பதால் சட்டப்படி நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல . பிரேத விசாரணை அறிக்கை காவல் நிலையத்திலேயே ஏற்படுத்தப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல . எதிரிக்கும், இறந்தவரின் குடும்பத்திற்கும் ஏற்கனவே இருந்த முன்விரோதத்தை காரணம் காட்டி சரிவர விசாரணை செய்யாமல் எதிரி மீது பொய்யாக இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. 10.06.2018 அன்று மாலை 03.50 மணிக்கு முதல் தகவல் அறிக்கை நீதித்துறை நடுவரால் பெறப்பட்டது என்றால் சரிதான் . எனது முதல் விசாரணை சாட்சியத்திலும் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணத்திற்கும் வேறுபாடு அதிகம் உள்ளது என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B. C. Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.